1993 அக்டோபர் 29] [திரு. க. அர்ச்சுணன்]

சேர்ந்து முயற்சி எடுத்தாலும் அதை அப்புறப்படுத்த முடியாத சூழ்நிலைக் காரணமாகத்தான் அங்கே டிராபிக் ஸ்தம்பித்து விடுகிறது என்று இருக்கிறது. எனவே, தற்போது இருக்கின்ற பிரச்சினை சேலத்திலிருந்து வாணியம்பாடிக்கு, அரூர் வழியாக திருப்பத்தூர் வழியாக வருகிற சாலையை மேம்படுத்துவதன் மூலமாக, வாகனங்களையெல்லாம் இந்தப் பகுதியிலே திருப்பிவிடுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், எப்படியும் இந்த மலைப்பாதையில் மாற்றுப் பாதை அமைக்க முடியாத காரணத்தினால், இந்தப் பாதையை தேசிய நெடுஞ்சாலை அளவிற்கு உயர்த்தி இந்தப் பகுதி வழியாக அனைத்து வாகனங்களையும் திருப்பி விடுவதற்கான வாய்ப்பை உருவாக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துக்களை இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சரோடு பேசி உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) திருநெல்வேலி மாவட்டத்தில் கீழப்பாவூர், ஆலங்குளம், சுரண்டை பகுதிகளில் மிளகாய்ச் செடிகள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். எஸ். ராமசுப்பு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி மாவட்டம் கீழப்பாவூர் ஆலங்குளம் சுரண்டைப் பகுதிகளில் மிளகாய்ச் செடிகள் தொடர்ந்து நோயினால் பாதிக்கப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1993 அக்டோபர் 29

அறிக்கை.

இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளப் பகுதிகளில் மிளகாய்ப் பயிர் சுமார் 1,850 எக்டேர் பரப்பளிளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதி திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தொடர்ந்து மிளகாய்ப் பயிர் செய்யும் பகுதிகளில் ஒன்றாகும்.

இப்பயிர் இவ்வாண்டு தக்க வளர்ச்சியின்மையால் பாதிக்கப் பட்டது. இவ்வளர்ச்சியின்மையின் காரணத்தினால் செடிகளில் பூக்களின் பிடிப்பு மிகவும் குறைவாக இருந்தது. இதனால் இப் பயிர் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள வயல்களில் மகசூல் குறை வாக உள்ளது. இப்பயிர் சிறிய அளவில் இலைப்பேன் போன்ற பூச்சியினால் பாதிக்கப்பட்டும் இருந்தது. இது போக இப்பயிரை தாக்கும் பூச்சி மற்றும் பூஞ்சாள நோய்களின் பாதிப்பு அதிக அளவில் இல்லை.

பாதிக்கப்பட்ட பகுதியில் ஒரு சில அதிகமாக பாதிப்படைந்த வயல்களை தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத் துறை தொழில் நுட்ப வல்லுநர்கள் பார்வையிட்டு இதுபற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த புது வகையான பயிரின் வளர்ச்சி குன்றிய நிலை கீழ்க் கண்ட காரணங்களினால்தான் ஏற்பட்டுள்ளது என அறியப்பட்டது

1. பயிர் சுழற்சி முறையை கடைபிடிக்காமை.

2. இயற்கை உரங்கள் தேவையான அளவில் பயன்படுத் தாமை.

3. பைரித்திராய்டு போன்ற பூச்சி மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்துதல் மேலும், அதிக அளவில் பயிர் பாது காப்பு மருந்துகளை உபயோகப்படுத்துதல்.

4. பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு மேல் இராசாயன உரங் களை பயன்படுத்துதல் மேலும், புரோஜிப் போன்ற பயிர் ஊக்கி களை தேவையற்றபடி பயன்படுத்துதல்.

5. ஒரே விதையை திரும்ப திரும்ப பயன்படுத்துதல்.

இந்த விவரங்களை தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத் துறை விரிவாக்கப் பணியாளர்களால் விவசாயிகளுக்கு எடுத் துரைக்கப்பட்டது. மேலும், அகில இந்திய வானொலி மற்றும் பத்திரிகைகளில் தொடர்ந்து கருத்துக்கள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது.

1993 அக்டோபர் 29] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

விவசாயிகள் மேற்சொன்ன முறைகளை கடைபிடிப்பதை தவிர்க்க வேண்டுமென்று தொடர்ந்து தகவல்களும், செய்தி. களும் வழங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில விவசாயி களின் வயல்களில் வருகின்ற நவம்பர் 1993-ம் மாதத்தில் செயல் விளக்க பாத்திகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயல் விளக்க பாத்திகளில் அனுசரிக்கப்படும் விவரங் களை அதிகமான விவசாயிகளுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், விவசாயிகளுக்கு இது பற்றி விழிப்புணர்ச்சி ஏற் படுத்த விழிப்புணர்ச்சி முகாம்கள் அதிக அளவில் மேற்கொள்ளப் பட்டு விவசாயிகள் அதிக அளவில் தொழு உரம் மற்றும் இயற்கை உரங்களை உபயோகப்படுத்த தகவல்கள் தெரிவிக்கப்படும்.

இது தவிர வாசனை திரவிய வாரிய உதவியுடன் வாசனை திரவிய பயிர்கள் மேம்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசி னுடைய தீவிர பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கப்பாத்திகள் மற்றும் பயிர் பாதுகாப்பு உபகரணங்களான தெளிப்பான்கள் மற்றும் தூவான்கள் போன்ற இனங்கள், உயர் ரக விளைச்சல் தரும் விதைகள் போன்றவை வழங்கப்படவுள்ளது.

இந்த திட்டம் இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் அதிக அளவில் பயன் பெறும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் இதுபோன்ற தேவையான அனைத்து சரியான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், முத்தரப்பு கருத்தரங்கு வாசனை திரவிய வாரிய உள்ளிட்ட அரசு துறைகள், விவசாயி கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை இணைத்து மேற்கொள்ளப் படவுள்ளது.

இதனால் விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் மிளகாய்ப் பயிரை மிக அதிக அளவில் இலாபம் பெறுகின்ற அளவில் விற் பனை செய்ய வழிவகைச் செய்யும். இது கோவில்பட்டியில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட காரணங்களினால் அரசு எல்லாவிதமான தேவை யான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதனால் மிளகாய் பயிர் செய்துள்ள விவசாயிகளுடைய அனைத்து நலன்களும் தகுந்த முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த பகுதியில் மிளகாய்ப் பயிர் செய்யும் விவசாயிகள் எந்தவிதமான பயமோ, அச்சமோ கொள்ள வேண் டாமென தெரிவிக்கப்படுகிறது. இக்காரணங்களினால் இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை இந்த நிலையிலேயே விட்டு விட லாமென வேண்டப்படுகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகளில் மிளகாய் வற்றல் என்பது வெளி நாடுகளுக்கு எல்லாம் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே ஒரு பணப் பயிராக விவசாயிகள் பெருவாரியாக அங்கே பயிர் செய்து வருகின்றார்கள். அதிலும் சிறு விவசாயிகள் அதிகமாக பயிர் செய்யக்கூடியது. இப்பொழுது இரண்டு வருட காலமாக, அதாவது ஓராண்டு ஏற்படும் போதே யாருமே கவனிக்காமல் விட்டதினால், இன்றைக்கு இரண்டு மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து அது வந்ததினால், அந்தப் பகுதியிலே பெரும் விளைச்சல் இல்லாமல் போனதினால், விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த விவர அறிக்கையிலே சொல்லும்போது பயிர் சுழற்சி முறையை கடைபிடிக்காததினால் பூச்சிக்கொல்லி மருந்துகளை அதிகமாக பயன்படுத்தியதினால், இரசாயன உரங்களை முறையாக பயன் படுத்தாதினால்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள் அதெல்லாம் விவர அறிக்கையிலே இருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : அந்தக் காரணத்தினால் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்தக் காரணம் சரியான காரணமாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது இந்தக் காரணத்திற்கு உட்பட்டதாகத் தெரியவில்லை. இவற்றையெல்லாம் போடாமல் சாதாரணமாக தொழு உரம் போட்டதில் கூட, சரியாக அந்தப் பயிர் விளை யாமல் இருந்துவிட்டது. ஒட்டுமொத்தமாக அதற்கு ஒரு பெரிய ஆராய்ச்சியை நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும், அதோடு அந்தப் பகுதி மக்கள் விவசாயத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதற்கு நீங்கள் நிவாரணம்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிளகாய்ப் பயிரை அந்த மக்கள் தொடர்ந்து அதே பயிரை பயிரிட்டு வந்த காரணத்தினால் அந்தப் பயி ருக்குத் தேவையான சத்துக்களை அது எடுத்துக்கொண்டதால் மீதி இருக்கக்கூடிய அந்த மண்ணுக்கு அந்தச் சத்துக்கள் கிடைப் பதில்லை. எனவே, வருகின்ற நவம்பர் மாதத்தில் அங்கே உள்ள விவசாயிகளை அழைத்து ஒரு செயல் விளக்கப் பாத்தி அமைக் கப்படும் என்பதையும், அரசு, பொது மக்கள், அதேபோல் ஸ்பைசஸ் போர்ட் வைத்து ஒரு ஆராய்ச்சி நடத்துவதிலேயும் மக்களுக்குத் தேவையான அறிவுரை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.